# ஒதுக்கீட்டுத் தலைப்பு – 174 புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைத்தல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| II ஆம் பகுதி | - | ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## I ஆம் பகுதி

## புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைத்தல் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| 326 | சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 4,444,339,224 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 4,416,425,969 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 7,969,504 இற்கும் ரூபா 11,443,738 இற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.25 சதவீத்திற்கும் 11.01 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 174 | புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைத்தல் அமைச்சு | 261,560,000 | 781,029,224 | 257,424,069 | 773,721,417 | 4,135,931 | 7,307,807 |
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 3,136,300,000 | 193,100,000 | 3,132,019,693 | 188,880,294 | 4,280,307 | 4,219,706 |
| 326 | சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 54,400,000 | 17,950,000 | 53,852,266 | 10,528,230 | 547,734 | 7,421,770 |
| | மொத்தம் | 3,452,260,000 | 992,079,224 | 3,443,296,028 | 973,129,941 | 8,963,972 | 18,949,283 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களகங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைத்தல் அமைச்சு | 17401 | 1,000,000 | 991,673 | 350,000 | 1,470,513 | 10,000,000 | 6,666,555 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 23201 | 155,000,000 | 133,031,457 | 95,000,000 | 101,140,186 | 406,000,000 | 326,060,942 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 32601 | 3,000,000 | 2,931,000 | 1,800,000 | 1,861,682 | 13,000,000 | 15,535,208 |

### 2.2.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் வர்த்தக முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| திணைக்களம் | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | | ரூபா | ரூபா |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 23202 | 153,000,000 | 121,765,174 | 175,000,000 | 113,116,394 | 35,000,000 | 59,481,687 | 15,000,000 | 4,590,506 |

### (ஆ) நிதி விளைவுகள்

வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

**நிதி விளைவுகள்**

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கை | 2010 இலாபம் (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | 2010 இலாபம் (கருதுகோள் கட்டணம் அடங்கலாக) | 2009 இலாபம் (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | 2009 இலாபம் (கருதுகோள் கட்டணம் அடங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 23202 | கைத்தொழில் மற்றும் விவசாயம் | 39,666,949 | 15,687,296 | 46,661,964 | 25,110,670 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்கு

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 1,843,983 வரவு மீதியும் ரூபா 254,521 செலவு மீதியும் காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி வரவு/(செலவு) |
|---|---|
| | ரூபா |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 1,843,983 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | (254,521) |

### 2.3.2 பொதுவைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 58,253,359 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைத்தல் அமைச்சு | 748,576 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 5,901,703 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 51,603,080 |

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ரூபா 51,603,080 ஆன பொது வைப்புக் கணக்கின் மீதி தொடர்பில் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டுகின்ற தனித்தனி கணக்கு மிதிகளின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வர்த்தக முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 23202 ஆம் விடய இலக்க சிறைச்சாலைகள் விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் முற்பணக் கணக்கின் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 83,168,629 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) 2010 ஆம் ஆண்டின் கணக்குகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் பரிசோதனையில் வெளிப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

- இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனைப் பெறுமதிக்கும் 08 சிறைச்சாலை நிறுவகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த விற்பனைப் பெறுமதிகளிற்குமிடையே ரூபா 225,809 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.
- இறுதிக் கணக்குக் கூற்றுக்களில் மூலப்பொருள் கொள்வனவு ரூபா 2,094,785 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) 2010 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த இருப்பு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஆண்டிறுதி இருப்பின் பெறுமதி ரூபா 200,156 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.
- பல்லெகெலே சிறைச்சாலையின் ரூபா 60,000 பெறுமதியான இறுதி இருப்பு பௌதீக ரீதியில் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.
- குருவிட சிறைச்சாலையின் கால்நடை வளர்ப்பு பிரிவின் இருப்பில் ரூபா 58,125 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.
- 05 சிறைச்சாலைகளில் முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்றுள்ள நட்டங்கள் மீளாய்வாண்டின் இலாப நட்டக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 520,320,899 ஆக காணப்பட்டதுடன் அதன் மீதான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.